**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 4/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W. 2 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | சின்னசாமி | தொழில் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பழனிக்கவுண்டர் | ஜாதி |
| கிராமம் | : | | இனம் |
| தாலூக்கா | : | | வயது |
| Mail ID | : | | Mobile No. |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 30.10.2025

முதல் விசாரணை

நான் அமராவதி நகரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். 5-6 வருடத்திற்கு முன் எனது இரு சக்கர வாகனத்தில் மானுப்பட்டி சென்று விட்டு எனது தோட்டத்திற்கு சென்ற போது வெங்கடேஸ்வரா பள்ளி அருகில் பெரியவர் ஒருவர் விபத்தில் அடிபட்டு கீழே கிடந்திருந்தார். அங்கு கூட்டமாக இருந்ததால் நான் சென்று போய் பார்த்தேன். அந்த பெரியவர் எந்த திசையில் வந்தார் என்றும் எந்தவண்டி எந்த திசையில் இருந்து வந்து மோதி விபத்தை ஏற்படுத்தினார்கள் என்று நான் எந்த சம்பவத்தையும் நான் நேரில் பார்க்கவில்லை. கூட்டமாக இருந்ததால் சென்று போய் பார்த்தேன். விபத்தை ஏற்படுத்திய நடத்தியவர் யார் என்றும், அந்த வாகனத்தில் எத்தனை பேர் வந்தார்கள் என்று எந்த சம்பவத்தையும் நான் நேரில் பார்க்கவில்லை. விபத்தில் ஏற்படுத்தியவர் எந்த ஊரைச் சார்ந்தவர், அவருடன் யார் வந்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடநத 06.12.2019 ம் நான் எனது தோட்டத்திற்கு செல்வதற்காக எனது இருசக்கர வாகனத்தில் சென்ற பொழுது வெங்கடேஸ்வரா பள்ளி அருகில் சென்ற சமயத்தில் எனக்கு முன்னால் ஆக்ஸ்போர்டு சைனிக் பள்ளியில் வேலை செய்யும் உதயகுமார் என்பவரும் சென்று கொண்டிருந்தார் என்றும், அந்த சமயத்தில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த நடராஜன் என்பவர் தனது பேரன் மெரின் கண்ணாவுடன் 9/6 செக்போஸ்ட்டில் உள்ள கடைக்கு செல்வதற்காக ரோட்டின் இடது புறமாக நடந்து வந்து கொண்டிருந்தார்கள் என்றும், அந்த சமயத்தில் அவர்களுக்கு பின்னால் வந்த ஹீரோ ஹோண்டா ஸ்ப்லெண்டர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த பின்னாளில் விவரம் கேட்டு தெரிந்த டேவிட் ரஞ்சித் என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து நடந்து சென்ற நடராஜன் மீது மோதியதில் நடராஜன் கீழே விழுந்து தலையில் வளர்த்த அடிபட்டது என்றும், அதை பார்த்த நானும் விஜயகுமார் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு சென்று போய் பார்த்தோம் என்றும், உடுமலை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தோம் என்றும், சென்ற வழியில் நடராஜன் இறந்துவிட்டார் என்று விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது யாருக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரயல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakal, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.